BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

பெரியபுராணத்திலும் பசவபுராணத்திலும் திணைமயக்கக் கருத்தியல்கள் - ஓர் ஒப்பீடு

A Comparative Study of the Concept of Tiṇaimayakkam in Periyapuranam and Basavapuranam

மணிகண்டன் வ ஏ

முனைவர்பட்ட ஆய்வாளர், சிறப்புநிலைத் தமிழ்த்துறை, ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.

Manikandan.V. E

Research scholar, special centre in Tamil, Jawaharlal Nehru University, New Delhi,

E. mail: tamildhasan92@gmail.com

Abstract

The growth of Tiṇai theory is primarily rooted in the concept of Tiṇaimayakkam (the fusion or intermingling of landscapes). This notion can be observed not only in Sangam literature but also in later and non-Tamil literary traditions. In particular, the concepts of Tiṇaimayakkam can be examined in both the Periyapuranam and the Basavapuranam. In Sangam poetry, Tiṇaimayakkam reflects the inner emotions of the hero and heroine through symbolic expression. However, in the Periyapuranam and the Basavapuranam, the idea of Tiṇaimayakkam differs from its Sangam poetic context, serving instead to express the emotional and devotional relationship between the Lord and His devotees. When exploring Tiṇaimayakkam within these Purāṇas, it can be analyzed through the narratives of devotees such as Thirukkuripputhondar, Anayanar, Kannappar, and Viranmindar Nayanmar. The primary objective of this study is to identify and analyze the types of Tiṇais that merge or overlap within these Purāṇic texts and to understand how this blending reflects devotional transformation.

Keywords: Nayanmar, Tiṇaimayakkam, Veerashaivism, Periyapuranam, Basavapurana, Tolkappiyam.

ஆய்வுச் சுருக்கம்

திணைக்கோட்பாட்டு வளர்ச்சிக்குத் திணைமயக்கமே முக்கியமாக அமைகிறது. அதனைச் சங்க இலக்கியங்களில் மட்டுமின்றிப் பிற்கால/பிறமொழி இலக்கியங்களிலும் காணவியலும். குறிப்பாக, பெரியபுராணத்திலும் பசவபுராணத்திலும் திணைமயக்கக் கருத்துகளை ஆராயலாம். சங்கப் பாக்களில் இடம்பெற்றுள்ள திணைமயக்கக் கருத்தியல் தலைவன், தலைவியின் அக உணர்வுகளைக் குறியீட்டுத் தன்மையில் பேசுவதாக அமைகின்றது. பெரியபுராணத்திலும் பசவபுராணத்திலும் இடம்பெறும் திணைமயக்கக் கருத்து என்பது சங்கத் திணைமயக்கக் கவிதையியலைப் போலன்றி, இறைவன், அடியார் ஆகியோரின் உணர்வுகளைப் பேசுவதாகவே அமைகின்றது. பெரியபுராணத்திலும் பசவபுராணத்திலும் திணைமயக்கம் குறித்த கருத்துகளை ஆராய்ந்த போது அவற்றைத் திருக்குறிப்புத் தொண்டர், ஆனாயனார், கண்ணப்பனார், விறன்மிண்டர் நாயன்மார் ஆகியோர் புராணங்களில் ஆராயவியலும். அப்புராணங்களில் எந்தந்த திணைகள் மயங்கி/கலந்து வந்துள்ளன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: நாயன்மார், திணைமயக்கம், வீரசைவம், பெரியபுராணம், பசவபுராணம், தொல்காப்பியம்

திணை விரிவாக்கத்திற்குத் திணைமயக்கக் கவிதையியலே முக்கியஅங்கமாக அமைகின்றது. இக்கவிதையியல் குறித்துப்பெ.மாதையன்(2009), அய்யப்ப பணிக்கர்(2012), க.ஜவகர்(2017)முதலானோர் ஆராய்ந்துள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.தொல்காப்பியத் திணைக்கோட்பாட்டு வளர்ச்சிக்கான கூறாகத் திணைமயக்கம் குறித்த கருத்தியலையே முன்வைகின்றார் அய்யப்ப பணிக்கர்(2012:112).'திணைமயக்கம் பற்றிய புரிதல்தான் சங்கப் பாடல்களின் திணைப்பகுப்பைப் புரிந்து கொள்வதற்கான அடிப்படைகளைக் தருவதாகப்(2023:156)' பெ.மாதையன் கருதுவதும் இங்கு மனங்கொள்ளதக்கது. இவர்களின் இந்தக் கூற்று, திணைமயக்கக் கவிதையியலின் முக்கியத்துவதைக் காட்டுவதாக அமைகின்றது. திணைமயக்கம் குறித்த கருத்துகள் பெரியபுராணத்திலும் பசவபுராணத்தில் எந்தத் தன்மையில் அமைந்துள்ளன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாக அமைகின்றது.

சங்கப் பாக்களில் இடம்பெற்றுள்ள திணைமயக்கக் கருத்தியல் தலைவன், தலைவியின் அக உணர்வுகளைக் குறியீட்டுத் தன்மையில் பேசுவதாக அமைகின்றது. பெரியபுராணத்திலும் பசவ புராணத்திலும் இடம்பெறும் திணைமயக்கக் கருத்து என்பது சங்கத் திணைமயக்கக் கவிதையியலைப் போலன்றி, இறைவன், அடியார் ஆகியோரின் உணர்வுகளைப் பேசுவதாகவே அமைகின்றது. இதில் இறைவனைத் தலைவனாகவும் அடியாரைத் தலைவியாகவும் கொள்ளவியலும்.

சங்க இலக்கியத்தில் தலைவன்/தலைவி உடைய நாட்டின் சிறப்பையும் அவர்களின் உணர்வுகளைக் கூறுவது போலவே பெரியபுராணத்திலும் பசவபுராணத்தில் இடம்பெறும் தலைவனான இறைவனின் சிறப்பையும் தலைவியான அடியாரின் சிறப்பையும் குறியீட்டுத் தன்மையில் கூறியுள்ளதைக் காணமுடிகிறது. இறைவனின் மீது அடியார் கொண்ட காதல் உணர்வு கருப்பொருட்களின் அடிப்படையில் கூறப்படுகிறது.

முதலாவதாக, திணைமயக்கம் குறித்துத் தொல்காப்பியம் கூறுவதைக் கீழ்வரும் நூற்பாக்களின் வழி அறியலாம்.

திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே
(தொல்.அகத்.14)

எனவும்,

உரிப்பொருள் அல்லன மயக்கவும் பெறுமே
(தொல்.அகத்.15)

எனவும்,

எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும் (தொல்.அகத்.21)

தொல்காப்பியம் இம்மூன்று நூற்பாக்களிலும் திணைமயக்கம் குறித்த அடிப்படையான இலக்கணத்தைக் கற்பிக்கிறது.

முதற்பொருளில் 'நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப' (தொல்.அகத்.14) எனத் தொல்காப்பியம் கூறியதால் அதனை உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இளம்பூரணர், "ஒரு திணைக்கு உரிய முதற்பொருள் மற்றோர் திணைக்குரிய முதற் பொருளோடு சேரநிற்றலும் கட்டப்படாது (தொல்.அகத்.14). என்கிறார். இவர் முதற்பொருளில் நிலம் மயங்காது; காலம் மயங்கும் என்கிறார். திணையை நிலமாகக் கொள்வதால் நிலம் மயங்காது எனும் கருத்துடையவராக அமைகின்றார். கருப்பொருளும் மயங்கும் என்கிறார்.

நச்சினார்க்கினியர், "ஒரு நிலத்து ஒரொழுக்கம் நிகழுமென நிரனிறுத்துக் கூறிய ஒழுக்கம் அவ்வந்நிலத்திற்கே உரியதா யொழுகாது தம்முண் மயங்கிவருதலும் நீக்கப்படா (தொல்.அகத்.14)" என்கிறார். இதில் நச்சினார்க்கினியர், திணை என்பதற்கு ஒழுக்கம் எனப் பொருள் கொண்டு திணைக்கு ஒழுக்கமாகிய உரிப்பொருள் மயங்கி வரும் என்கிறார். அதாவது, ஒரு திணைக்கு ஓர் உரிப்பொருள் மட்டுமின்றி, ஒன்றுக்கு மேற்பட்ட உரிப்பொருட்களும் கலந்து வரலாம் என்கிறார்.

இவற்றுள், ஆ.சிவலிங்கானார், இளம்பூரணர் கருத்தையும் ச.சோமசுந்தர பாரதியார், ச.பாலசுந்தரம் ஆகியோர் நச்சினார்க்கினியர் கருத்தையும் பின்பற்றுகின்றனர். .

திணைமயக்கத்தில் காலம், கருப்பொருள் ஆகியன மயங்கும் என்பதைப் பிற்கால இலக்கணிகள், உரையாசிரியார்கள், ஆய்வாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், உரிப்பொருள் பற்றிக் கூறுமிடத்துக் கருத்து வேறுபாடு நிலவுவதைக் காணமுடிகிறது. ஆக, தமிழ்ச் சூழலில் திணை வகுப்பதற்கு எவ்வாறு இருவகைக் கருத்துகள் நிலவுகிறதோ அதைப்போலவே திணைமயக்கம் பற்றியும் இருவகையான கருத்துகள் நிலவுவதைக் காணமுடிகிறது. அதாவது, உரிப்பொருள் மயங்குவது இல்லை என இளம்பூரணரும் உரிப்பொருள் மயங்கும் என நச்சினார்க்கினியரும் கூறும் இருவேறு மரபுகள் காணப்படுகின்றன. இதில் நச்சினார்க்கினியர் குறிப்பிடும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

பெரியபுராணத்திலும் பசவபுராணத்திலும் திணைமயக்கம் குறித்த கருத்துகளை ஆராய்ந்த போது அவற்றைக் கீழ்வரும் நாயன்மார் புராணங்களில் காணமுடிகிறது.

- திருக்குறிப்புத் தொண்டர்
- ஆனாயனார்
- கண்ணப்பனார்
- விறன்மிண்டர்

திருக்குறிப்புத் தொண்டரும் மடிவாறு மாசய்யாவும்

பெரியபுராணம் திருக்குறிப்புத் தொண்டர் பற்றிய புராணத்தை 128 விருத்தப்பாக்களில் குறிப்பிடுகின்றது. அதனைத் திணைப் பின்புலத்தில் ஆராய்ந்த போது அவை திணைமயக்கக் கருத்தியல்களைக் காணமுடிகிறது. திருக்குறிப்புத் தொண்டர் குறித்து இடம்பெறும்ஐந்து பாடல்கள்(பெரிய.திருக்.41,42,44,45,46) திணைமயக்கம் கொண்டவையாக அமைகின்றன. அவை:

- நெய்தலும் குறிஞ்சியும் கலந்து வருதல்
- மருதமும் குறிஞ்சியும் கலந்து வருதல்
- நெய்தலும் முல்லையும் கலந்து வருதல்
- மருதமும் முல்லையும் கலந்து வருதல்
- நெய்தலும் மருதமும் கலந்து வருதல்

எனும் தன்மையில் இவரது பாடல்கள் திணைமயக்கம் பெற்றுள்ளன. முதலாவதாக, இவரது வாழ்வியலைக் கீழ்வருமாறு வருவித்துக் கொள்ளலாம்.

- அடியார்களின் ஆடைகளைத் துவைத்துத் தருவதினைத் தன்னுடைய நியமமாகக் கொண்டிருத்தல்.
- இறைவன், இவரின் பக்தியைச் சோதிப்பதற்காக அழுக்கடைந்த ஆடையுடன் அடியாராக வருதல்.
- அழுக்கடைந்த ஆடையைத் திருக்குறிப்புத் தொண்டர் துவைத்துத் தருவதாகக் கூறுதல்.
- அழுக்கடைந்த ஆடையை மாலைப் பொழுதிற்குள் துவைத்துத் தரும்படிக் கூறல்.
- ஆடையைத் துவைக்கப் போட்டதும் அடைமழை விடாது பெய்ததால், அடியார் தான் மாலைப் பொழுதிற்குள் உலர்த்தித் தருவதாகக் கூறிய ஆடை நனைந்ததைக் கண்டு பாறையில் தன் தலையை மோதிக் கொள்ளுதல்.
- இறைவன் அருளால் நீர்மழை மலர்மழையாகப் பொழிதல்.

இவர் வாழ்ந்த தொண்டை நாட்டின் சிறப்பைக் கூறும்போது அதன் சூழிட அழகியலையும் தெளிவுறக் காட்சிப்படுத்துகிறது பெரியபுராணம். பெரியபுராணம், தொண்டை நாட்டில் அமைந்துள்ள திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர் போன்ற பல தலங்களின் சிறப்புகளையும் அதன் நில அமைப்பையும் திணைப் பின்னணியில் இருந்து விளக்குகிறது. இதுபோன்று சில தலங்களைக் கூறும்போது அவற்றில் காலமும் கருப்பொருளும் மயங்கித் திணைமயக்கம் அடைந்து வருவதைக் காணமுடிகிறது. இனி, அவற்றை விளக்கமாக ஆராயலாம்.

மாமல்லை நகரத்தின் சிறப்பைக் கூறும் போது அந்நகரின் நில அமைப்பு நெய்தலும் குறிஞ்சியுமாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. அப்பாடல் வருமாறு:

கோடு கொண்டெத் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலுங் குறிஞ்சியும் புணர்சிலம் பலவால்
நீடு நீள்கொடி மாடமா மல்லையே யனைய.

(பெரிய.திருக்.41)

சங்குகளை மேற்கிளப்பும் அலைகளையுடைய கடலில் படர்கின்ற பவளக்கொடியின் மெல்லிய கொழுந்துகள் வளர்வதற்குப் பக்கத்தில் உள்ள சந்தன மரங்களின் கிளைகள் இடமாக அமைகின்றன என்னும் கருத்தை இப்பாடல் உணர்த்துகிறது. இப்பாடலில் நெய்தல்நிலக் கருப்பொருள்களான சங்கு, பவளம் போன்றவையும் குறிஞ்சிநிலக் கருப்பொருளான சந்தன மரமும் இடம்பெற்றுள்ளன. இப்பாடல் நெய்தலும் குறிஞ்சியும் கலந்து திணைமயக்கம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

மருதமும் குறிஞ்சியும் மயங்கி வருவதினையும் காணமுடிகிறது. மலைகளே கண்ணைத் திறந்து பார்க்கின்ற அளவிற்குச் சேல்மீன்கள் (கெண்டைமீன்கள்) மலைகளின் பாறைகளின் இடத்தும் வயல்களின் இடத்தும் காணப்படுகின்றன. அங்கு ஏர்பூட்டிய கரிய எருமைகளும் செல்கின்றன என்பதாக இப்பாடல் அமைகின்றது (பெரிய.திருக்.42). இதில், மருதநிலக் கருப்பொருளான சேல்மீனும் குறிஞ்சிநிலக் கருப்பொருளான மலைப்பாறைகள் என்பதும் வருவதை நோக்கும் போது அவை மருதமும் குறிஞ்சியும் கலந்து திணைமயக்கம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

பரதவர்கள், தாங்கள் கொண்டுவந்த மீன்களை இடையர்களிடம் பண்டமாற்று முறை செய்தது பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது. (பெரிய.திருக்.44) இதில் நெய்தல் திணைக்கு உரிய பரதவரும் முல்லை நிலத்திற்கு உரிய இடையரும் இப்பாடலில் இடம்பெற்றுத் திணைமயக்கம் அடைந்திருப்பதையும் காணமுடிகிறது.

முல்லையில் காடுகளில் வாழும் இடையர்களின் அழகிய நடையினையும் அகன்ற நெடிய வயல்களில் வாழும் மருதநிலத்தில் வாழும் உழத்தியர்களது சாயலையும் விரும்பி இயங்குகின்ற அன்னமும் மயிலும் எதிர் எதிர் பயில்வதான குறிப்பு இடம்பெறுகிறது. இவற்றில், மருதநிலத்திற்கு உரிய அன்னமும் முல்லை நிலத்திற்கு உரிய மயிலும் இடம்பெற்று திணைமயக்கம் அடைந்துள்ளதையும் விளங்கிக் கொள்ளமுடிகிறது (பெரிய.திருக்.45).

கடலினால் கொழிக்கப்பட்ட வெள்ளிய முத்துக்களும் பாக்கு மரத்தின் உதிர்ந்த பாளையும் உதிர்ந்த பூக்களும் கலப்பதால் பரத்தியர்களும் உழத்தியர்களும் அவற்றை முன்வாரிச் செல்கின்றனர். இதில் நெய்தல்திணையும் மருதத்திணையும் மயங்கி வருவதைக் காணமுடிகிறது(பெரிய.திருக்.46).

திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் தொண்டை நாட்டில் அமைந்துள்ள பல தலங்களின் சிறப்புகளையும் அதன் சூழிட அழகியலையும் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. அவற்றுள், மாமல்லையின் நில வருணனையைக் கூறும் போது அதில் பல நிலங்கள் கலந்து வருவதைக் காணமுடிகின்றது. மாமல்லை நகரத்தின் அழகியலைக் கூறுவதை ஆராய்ந்த போதுஅதில்திணைமயக்கம்குறித்த கருத்தியல்கள் அமைந்திருப்பதை அறியமுடிந்தது.

பசவபுராணத்தில் திருக்குறிப்புத் தொண்டரின் புராணம் மடிவாறு மாசய்யா எனும் பெயரில் அமைந்துள்ளது. அவரைக் குறித்த வாழ்வியலைக் கீழ்வருமாறு வருவித்துக் கொள்ளலாம்.

- அடியார்களின் ஆடைகளைத் துவைப்பதையே தன்னுடைய நியமமாக் கொண்டொழுகுதல்.
- சிவபக்தராக இல்லாதவர் தன் எதிரில் வந்தால் அவரைக் கத்தியால் குத்துதல்.
- இவரின் சிவபத்தியைக் கேட்ட பசவண்ணா அவரைப் புகழ்ந்து பேசுதல்.
- ஒருநாள் அடியார்களின் ஆடைகளைது துவைக்கச் சென்ற போது அவ்வாடையைத் தெரியாது எதிரே வந்தவர் தொட்டமைக்காக அவரைக் குத்திக் கொல்லுதல்.
- இவர் குத்திக் கொன்றதை மக்கள் மன்னனிடம் முறையிட்டதும், அவரைக் கொல்வதற்கு மன்னன் ஆணையிடுதல்.
- இவரைக் கொல்ல அனுப்பிய யானை அதன் பலத்தை இழக்குமாறும் அதனை ஓட்டிவந்த பாகனும் கீழே விழுமாறு செய்தல்.

அடியார்களின் ஆடைகளைத் துவைப்பதையே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி வருகிறார். இங்கு மன்னன் சிவபத்தராக இல்லாததால் அவரை மன்னன் என்றும் கருதாமல் இருப்பதைக் காணமுடிகிறது. இது அக்காலச் சூழலில் மன்னனை விட அடியார் உயர்வாகக் கருதப்பட்டதைக் காட்டுகிறது. வீரசைவம் அடியாரிடம் உச்சநிலையில் இருந்துள்ளதையும் வெளிப்படுத்துகிறது.சங்க இலக்கியத்தில் மன்னன் பெற்ற இடத்தைச் சமய இலக்கியத்தில் இறைவன் பெறுகிறான். சில இடங்களில் இவ்விடத்தை அடியார் பெறுவதையும் காணமுடிகிறது.

இவ்விரு இலக்கியங்களில் திணைமயக்கம் தொடர்பான கருத்துகளை ஒப்பிட்டு ஆராய்ந்த போது அவை பெரியபுராணத்தில் மட்டுமே இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. நெய்தல் நிலத்திற்கு உரிய கருப்பொருள்களான சங்கு, பவளம் போன்றவையும் குறிஞ்சி நிலத்திற்கு உரிய கருப்பொருளான சந்தன மரமும் இடம்பெற்று நெய்தலும் குறிஞ்சியும் திணைமயக்கம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. ஆனால், பசவபுராணத்தில் திணைமயக்கம் குறித்த கருத்துகளை அறியமுடியவில்லை. மடிவாறு மாச்சய்யா கதையில் வீரசைவம் சார்ந்த கருத்துகளை மட்டுமே காணமுடிகின்றது. மாச்சய்யா வண்ணார் சமூகத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர் வீரசைவ நெறியைப் பின்பற்றுவதால் அவர் மன்னனை விட, உயர்வானவராக இருப்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது. பசவபுராணத்தில் மாச்சய்யா தலங்களுக்குச் சென்றது பற்றியான குறிப்புகள் எதுவும் அறியமுடியவில்லை. அதேபோல, அவர் வாழ்ந்த இடம்பற்றிய குறிப்பும் இடம்பெறவில்லை. இவ்விரு நாயன்மாரும் அடியார்களின் ஆடையைத் துவைக்கும் நியமம் கொண்டவராக இடம்பெறுவது மட்டும் இரு இலக்கியங்களிலும் ஒத்த தன்மை கொண்டதாக அமைகின்றது. பெரியபுராணத்தில் திருக்குறிப்புத் தொண்டர் பல தலங்களுக்குச் சென்றதான குறிப்பு இடம்பெறுகிறது. பசவபுராணத்தில் அது போன்ற குறிப்பு இடம்பெறவில்லை என்பதால் திணை பற்றிய கருத்துக்களைக் அறியமுடியவில்லை.

ஆனாய நாயனார்

பெரியபுராணத்தில் 41 விருத்தப் பாக்களில் ஆனாய நாயனார் புராணம் குறித்துக் கூறப்பட்டுள்ளது. அதனைத் திணையியல் நோக்கில் ஆராய்ந்த போது அவற்றில், முல்லைத்திணையும் மருதத்திணையும் கலந்து திணைமயக்கம் அடைந்துள்ளன. இவரது வாழ்வியலைக் கீழ்வருமாறு அடைவுபடுத்திக் கொள்ளலாம்.

- இடையர் குலத்தைச் சேர்ந்த ஆனாயர், பசுக்களை மேய்ச்சலுக்கு விட்டுப் புல்லாங்குழலில் சிவனின் ஐந்தெழுத்து மத்திரத்தை ஓதுதலையே தன்னுடைய நியமமாக கொண்டிருத்தல்.
- இவர் புல்லாங்குழலில் ஐந்தெழுத்து மாந்திரத்தை ஓதும் போது எல்லா உயிர்களும் இன்புற்று இருத்தல்.
- பல விலங்குகள் தம் பகைகளை மறந்து ஆனாயரின் ஐந்தெழுத்து மாந்திரத்தைக் கேட்டல்.
- இறைவனும் இவரது மந்திரத்தைக் கேட்டு இவருக்குக் காட்சியளித்தல்.

அல்லி மலர்களை உடைய வயல்களின் அருகில் முல்லை சூழ்ந்த நிலத்தில் இளைய கன்றும் மானும் குதித்து ஓடியதைக் கீழ்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

அல்லி மலர்ப்பழ னத்தய னாகிள வானீனும்
ஒல்லை முழுப்பை யுகைப்பி னுழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான்மறி யோடு குதித்தோடும்
மல்கு வளத்தது முல்லை யுடுத்த மருங்கோர்பால்
(பெரிய. ஆனாய.5)

இப்பாடலில் மருதத்திணைக்கு உரிய அல்லி மலரும் முல்லைத்திணைக்கு உரிய மானும் கலந்து திணைமயக்கம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

பசவபுராணத்தில் ஆனாய நாயனார் குறித்த கதை இடம்பெறவில்லை. பெரியபுராணத்திலிருந்து பசவபுராணத்திற்குச் சென்ற கதைகள் சமணர்களை எதிர்ப்பது போன்ற கதைகளும் சிவன் திருவிளையாடல் நிகழ்த்துவது போன்ற கதைகளும் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. இந்த இரு தன்மையில் பொருந்தாத கதைகளைப் பசவபுராணம் தவிர்த்து விடுகிறது. எனவே, இந்த இரு தன்மைகளைக் கொண்ட கதையில் ஆனாயரின் கதை அமையாதது, இவரது கதை பசவபுராணத்தில் இடம்பெறாமைக்குக் காரணமாகக் கருதலாம்.

ஆனாய நாயனார் குறித்த புராணம் பெரியபுராணத்தில் மட்டுமே அமைந்துள்ளது. அவரது புராணத்தில் மருதமும் முல்லையும் கலந்து வருவதைக் காணமுடிந்தது. அவரது கதை பசவபுராணத்தில் இடம்பெறவில்லை. அவரது கதை இடம்பெறாமைக்குக் காரணம், அக்கதை அதீத பக்தியை உணர்த்தாமல் இருப்பதால் அதனைப் பசவபுராணம் தவிர்த்திருக்கலாம்.

கண்ணப்பனாரும் உடுமூரி கண்ணப்பனாரும்

இவரதுபுராணத்தைத் திணையியல் நோக்கில் ஆராய்ந்த போது அது குறிஞ்சியும் முல்லையும் கலந்து திணைமயக்கம் பெற்றதாக அமைகின்றது. இவரது வாழ்வியலைக் கீழ்வருமாறு வருவித்துக் கொள்ளலாம்.

- வேடர் குலத்தைச் சார்ந்த இவர் வேட்டைத் தொழிலைத் தன் நண்பர்களுடன் மேற்கொண்டு வருதல்.
- திருக்காளத்தி மலையிலுள்ள குடுமித்தேவரைக் காணச் செல்லுதல்.
- குடுமித்தேவரை வணங்குவதற்குப் பொன்முகலி எனும் ஆற்றில் நீரைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்தல்.
- தன் தலையில் செருகி வந்த மலர்கள், இலைகளைக் கொண்டு பூசை செய்தல்.
- இறைவனுக்குக் காட்டுப் பன்றியின் இறைச்சியையும் தேனையும் உணவாகப் படையலிடுதல்.

வேடர் குலத்தைச் சேர்ந்த கண்ணப்பனார், குறிஞ்சி நிலமான மலைப் பகுதியில் வசிப்பதாகப் பெரியபுராணம் காட்சிப்படுத்துகிறது. அவர் குலத்தொழிலான வேட்டைத் தொழிலுக்குச் செல்வதற்காகக் காட்டிற்குச் செல்வதாகவும் காட்டப்பட்டுள்ளது. அங்குக் குறிஞ்சிக்கு உரிய விலங்கும் முல்லைக்கு உரிய விலங்கும் இடம்பெற்றுத் திணைமயக்கம் அடைந்துள்ளதைக் காணமுடிகிறது. அப்பாடல் வருமாறு:

குன்றவ ரதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியு மெண்குங் கடமையு மானின் பார்வை
யன்றியும் பாறை முன்றி லைவன முணங்கு மெங்கும்.

(பெரிய.கண்ண.3)

பசவபுராணத்தில் கண்ணப்பனார் கதை உடுமூரி கண்ணப்பனார் எனும் பெயரில் அமைந்துள்ளது. இவரது கதையிலும் குறிஞ்சியும் முல்லையும் கலந்து திணைமயக்கம் அடைந்து காணப்படுகின்றன.

- இவர் துயில் கொள்ளும் போது கனவில் சிவன் காட்சியளித்து, 'நீ காட்டில் வேட்டையாடும் போது ஓர் இலிங்கம் தெரியும் அதுவே பிராணலிங்கம்' எனக் கூறல்.
- காட்டிற்குச் சென்ற உடுமூரியார் கனவில் தான் கண்ட இலிங்கத்தைக் கண்டு வணங்குதல்.
- மழை, வெயில் போன்றவற்றால் இலிங்கத்திற்குத் துன்பம் ஏற்படும் என எண்ணி அதை வேறு இடத்திற்குக் கொண்டு செல்லுதல்.
- செருப்பணிந்த காலால் சுத்தம் செய்தும் வாயில் கொண்டுவந்த நீரைக் கொண்டு அபிஷேகம் செய்தும் இறைச்சியைப் படைத்து வருதல்.

இக்கதையில் முல்லை நிலத்துக்குரிய மாலைப்பொழுதும் குறிஞ்சி நிலத்துக்குரிய தேனெடுத்தல் தொழிலும் இடம்பெற்றுத் திணைமயக்கம் பெற்று வருவதைக் காணமுடிகிறது.

இவ்விரு நாயன்மார் கதையிலும் திணைமயக்கம் குறித்த கருத்தியலை ஒப்பிட்டு ஆராய்ந்த போது முல்லையும் குறிஞ்சியும் மயங்கி வந்துள்ளதைக் காணமுடிகிறது. குறிப்பாக, கருப்பொருள் மயங்கி வந்துள்ளதைக் காணமுடிகிறது. இந்த இரு இலக்கியங்களிலும் கண்ணப்பனார் வேடர் குலத்தைச் சார்ந்தவராகக் காட்டப்பட்டுள்ளார். தங்கள் இருப்பிடமான முல்லை நிலத்திலிருந்து குறிஞ்சி நிலத்திற்கு வேட்டைத் தொழிலுக்குச் சென்றது இரு இலக்கியங்களிலும் ஒத்த தன்மையில் அமைகின்றன. பெரியபுராணத்தில் இயற்கை வழிபாடு ஆகம வழிபாடு எனும் இரு நிலையில் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது, பசவபுராணத்தில் இயற்கை வழிபாடு வீரசைவ வழிபாடு எனும் நிலையில் வேறுபட்டு உள்ளதையும் காணமுடிகிறது. இரு இலக்கியங்களிலும் இக்கதைகள் வேறுபடுவதற்குக் காரணம் அதன் சமயப் பின்புலமே எனலாம்.

விறன்மிண்டரும் மிண்ட நாயனாரும்

பெரியபுராணம் இவர் குறித்த புராணத்தைப் பதினொரு விருத்தப் பாக்களில் குறிப்பிடுகின்றது. விறன்மிண்டரின் பாடல்களையும் திணைமயக்கக் கருத்துகளோடு பொருத்திப் பார்க்கவியலும். இவரது பாடல்களில் நெய்தல் திணையும் மருதத்திணையும் மயங்கி வருவதைக் காணமுடிகிறது. முதலாவதாக, இவரது வாழ்வியலைக் கீழ்வருமாறு வருவித்துக் கொள்ளலாம்.

- அடியார்களைத் தொழுத பின்பே இறைவனைத் தொழவேண்டும் என்பதை இவரது நியமமாகக் கொண்டொழுகுதல்.
- திருவாரூரிலுள்ள இறைவனை வணங்கசென்ற சுந்தரர், அங்குள்ள அடியார்களை வணங்காது, அவர்களை ஒதுங்கிச் சிவனைத் தொழுததால் சுந்தரர் மீது விறன்மிண்டர் சினம் கொள்ளுதல்.
- அடியார்களை வணங்கிய பின்பே உம்மை வணங்கவேண்டும் எனச் சிவனிடமே வேண்டுதல்.
- சிவனையும் சுந்தரரையும் புறகு எனக் கூறி அவர்களை விலக்கி வைத்தல்.

விறன்மிண்டரின் ஊரான திருச்செங்குன்றூரின் சிறப்பினைக் கூறுமிடத்து நெய்தல், மருதம், குறிஞ்சி ஆகிய திணைகளுக்குரிய கருப்பொருட்கள் மயங்கி வருவதைக் காணமுடிகிறது. அப்பாடல் கீழ்வருமாறு:

வாரி சொரியுங் கதிர்முத்தும் வயல்மென்
கரும்பிற் படுமுத்தும்
வேரல் விளையுங் குளிர்முத்தும் வேழ மருப்பி
னொளிர்முத்தும்
மூர லெனச்சொல் வெண்முத்து நகையார்
தெரிந்து முறைகோக்குஞ்
சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர்
செங்குன்றூர் (பெரிய.விறன்.2)

இப்பாடலில், கடலில் கிடைக்கும் ஒளி வீசும் முத்துக்களும் வயலில் விளையும் கரும்புகளில் படுகின்ற முத்துக்களும் மூங்கில்களில் விளைகின்ற குளிர்ச்சியுடைய முத்துக்களும் யானைக்கோடுகளில் பிறக்கும் விளக்கமுடைய முத்துகளும் சேர நாட்டில் வாழும் பெண்களின் சிரிப்பினைஉடைய பல்வரிசைக்கு உவமையாகக் கூறப்படுகிறது. இதில் நெய்தல்நிலக் கருப்பொருளான கடல் முத்துக்களும் மருத நிலக் கருப்பொருளான கரும்புகளின் முத்துக்களும் குறிஞ்சி நிலக் கருப்பொருளான மூங்கில்களின் முத்துக்களும் மயங்கி வருவதைக் காணமுடிகிறது. ஆக, இவர் வாழ்ந்த இடம் கடலும் நிலமும் மலையும் சூழ்ந்த பகுதியைக் கொண்டுள்ளதை விளங்கிக்கொள்ள முடிகிறது. இது இவரின் நாட்டுச் சிறப்பை உணர்த்துவதாக அமைகின்றது.இவரது பாடல்களில் நெய்தலும் மருதமும் குறிஞ்சியும் மயங்கித் திணைமயக்கம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

பசவபுராணத்தில் விறன்மிண்டரின் கதை மிண்டநாயனார் எனும் பெயரில் அமைந்துள்ளது. அக்கதையில் விறன்மிண்டர் கதையும் ஏயர்கோன் கலிக்காமர் கதையும் கலந்து வருவதைக் காணமுடிகிறது. இவரது கதையில் திணைமயக்கம் குறித்த கருத்துக்கள் இடம்பெறவில்லை. ஆனால், இவரது கதையில் கற்பு குறித்த கருத்து மட்டுமே இடம்பெறுகிறது. அக்கருத்தைக் கற்புக் காலப் பிரிவுடன் பொருத்திப் பார்க்க வாய்ப்புள்ளது.

விறன்மிண்டர் புராணத்தில் அடியார்களைத் தொழாது சிவனைத் தொழுதமைக்காக விறன்மிண்டர் சினம் கொண்டதாக அமைகின்றது. ஆனால், பசவபுராணத்தில் மிண்டனார் கீழ்வரும் இரண்டு காரணங்களுக்காகச் சினம் கொள்கிறார்.

- அடியாரை வணங்காது சிவனை வணங்கியதற்காகச் சினம் கொள்ளுதல்.
- சிவனைத் தாசியின் மனைக்குச் சேவகனாகப் பணிசெய்ய சொல்லிய தற்காகச் சினங் கொள்ளுதல்.

இவற்றுள், முதற் காரணமாக உள்ளது இரு நாயன்மார் கதையிலும் ஒத்த தன்மையில் அமைகின்றன. இரண்டாவது காரணமாக உள்ள சிவனைச் சேவகனாகப் பணிசெய்யக்கூறுவதைக் கற்பு வாழ்வியலோடு பொருத்திப் பார்க்கவியலும். இந்த இரண்டாவது காரணம் ஏயர்கோன் கலிக்காமர் நாயனார் புராணத்தில் இடம்பெற்றது, பசவபுராணத்தில் விறன்மிண்ட நாயனார் புராணத்தில் இடம்பெற்றுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்தக் குறிப்பு பசவபுராணத்தில் மிண்டனார் கதையில் மட்டுமே இடம்பெறுகிறது.

இந்த இரு நாயன்மார் கதைகளும் பெயர், ஊர், கதையமைப்பு எனப் பலநிலையில் வேறுபட்டுள்ளதைக் கீழ் வருமாறு காணலாம்.

- விறன்மிண்ட நாயனார் எனும் பெயர் மிண்டநாயனார் என மாற்றம் பெற்றிருத்தல்.
- பெரியபுராணத்தில் இடம்பெற்ற ஆளுடைய நம்பி பசவபுராணத்தில் உடைய நம்பியாக மாற்றம் பெற்றிருத்தல்.

- பரவையார், பசவபுராணத்தில் பொதுவாகத் தாசி என்பதாகக் குறிப்பிடப்பட்டிருத்தல்.
- பெரியபுராணத்தில் சிவனால் சுந்தரர் 'தம்பிரான் தோழர்' எனக் குறிப்பிடப்பட்டது, பசவ புராணத்தில் 'ஐயா' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல்.
- விறன்மிண்டனாரின் ஊர் திருச்செங்குன்றூர் மிண்டனாரின் ஊர் சேய்கொண்டா என்பதாக மாற்றம் பெற்றிருத்தல்.
- ஆரூர்(திருவாரூர்) என்பது திருவாலூராக மருவி இருத்தல்.
- பெரியபுராணத்தில் பரவையாருக்குப் பரிசனங்களும் நெல்லும் அளித்துப் பசவ புராணத்தில் 100 பொற்காசுகள் அளித்ததாக இடம்பெற்றிருத்தல்.
- சிவன், பெரிபுராணத்தில் தோழனாகவும் பசவ புராணத்தில் சேவகனாகவும் இடம் பெற்றிருத்தல்.

அடியரை வணங்காது செல்வது இரு இலக்கியங்களிலும் ஒத்த தன்மையில் இடம் பெற்றுள்ளது. ஏனைய கருத்துகளும் கதைக்கூறுகளும் வேறுபட்டு அமைந்துள்ளதை அறியமுடிந்தது. திணைமயக்கம் குறித்த கருத்தை விறன்மிண்டனாரின் பாடல்களில் மட்டுமே காணமுடிகின்றது. அதனை, மிண்டனாரின் கதையில் காணமுடியவில்லை. விறன்மிண்டனாரின் ஊர்ச் சிறப்பைக் கூறும் போது அதில் நெய்தல், மருதம், குறிஞ்சி திணைகள் மயங்கி வருவதைக் காணமுடிகிறது. மிண்டனாரின் கதையில் அவரது ஊர்ச் சிறப்பைக் குறித்து எதுவும் குறிப்பிடப்படாமையால், அதில் திணைமயக்கம் குறித்த கருத்தை அறிய இயலவில்லை.

தொகுப்புரை

திணைமயக்கம் திணை வளர்ச்சிக்கும் அதன் விரிவாக்கத்திற்கும் அடிப்படையாக அமைகின்றது. திணைமயக்கக் கவிதையியலில் இரு திணை சார்ந்த மக்களை ஒன்றிணைக்கச் செய்வதைக் காணமுடிகிறது. அதனை, திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தினூடாக அறியமுடிகிறது. இறைவன் வீற்றிருக்கும் தலத்தின் சிறப்பையும் நாயன்மார் வாழும் ஊரின் சிறப்பையும் கூறும் போது திணைமயக்கக் கவிதையியல் உத்தி இடம்பெற்றுள்ளதையும் அறியமுடிகிறது.

சங்க இலக்கியம் மனித உணர்வுகளைப் பாட இயற்கையை ஒரு குறியீட்டு உத்தியாகப் பயன்படுத்தியது, பிற்காலத்தில்(குறிப்பாகப் பக்தி இலக்கியத்தில்) இறைவனைப் பாட மனித உணர்வுகளோடு இயற்கை குறியீட்டையும் சேர்த்துப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது. ஆக, பெரியபுராணத்திலும் பசவபுராணத்திலும் இயற்கை+ மனிதன் = இறை உணர்வுகள் எனும் தன்மையில் மாற்றம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

பெரியபுராணத்திலும் பசவபுராணத்திலும் திணைமயக்கக் கருத்தியலை ஆராய்ந்த போது இரு இலக்கியத்திலும் திணைமயக்கக் கருத்தியல் பொருந்தி வருவதைக் கண்ணப்பனார் புராணத்தில் மட்டுமே அறியமுடிகிறது. பெரியபுராணத்தில் மட்டும் காணப்படும் திணைமயக்கக் கருத்தியலைத் திருக்குறிப்புத் தொண்டர், ஆனாய நாயனார், விறன்மிண்டர் போன்ற நாயன்மார் புராணங்களில் மட்டுமே காணமுடிகிறது. இவர்களின் புராணம் பசவபுராணத்தில் திணைமயக்கக் கவிதையியலில் அமையவில்லை. இவற்றின் கதை வேறுபாடுகளையே இதற்கான காரணங்களாகக் கருதவியலும். வணிகத் தொடர்பு, ஆட்சி மாற்றம் போன்ற காரணங்களால் நாயன்மார் கதைகள் திராவிடப் பகுதிகளில்பரவின. அக்கதைகள் தெலுங்கு, கன்னடம் போன்ற பகுதிகளில் வசித்த மக்களிடம் வாய்மொழியாகப் பரவியது இக்கதை வேறுபாட்டிற்கு முக்கியக் காரணமாக இருக்கலாம். தமிழ் அக, புற மரபுகளைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கையாண்டுள்ளார். ஆனால், இம்மரபு தெலுங்கு மொழியில் இல்லாததால் அகம் சார்ந்த கருத்துகளைப் பசவபுராணத்தில் பெரிதும் காணமுடியவில்லை. இதனால், திணைமயக்கம் குறித்த கருத்தியலைப் பசவபுராணத்தில் பெரிதும் காணமுடியவில்லை.

துணை நின்றவை

அய்யப்ப பணிக்கர், (ந.மனோகர்.மொ.ஆ.). (2012). *இந்திய இலக்கியக் கோட்பாடுகள் – சூழல்- பொருத்தம்,* சென்னை: மாற்று.

சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உரை.). (1937). *பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம்,* கோயமுத்தூர்: கோவைத் தமிழ்ச் சங்கம்.

மாதையன்.பெ. (2013). *தொல்காப்பியப் பொருளதிகாரச் சிந்தனைக்களங்கள்,* விழுப்புரம்: மணற்கேணி.

வெள்ளைவாரணன்.க (உ.ஆ). (1989). *தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்,* மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

ஜெயப்பிரகாஷ்.எஸ்., சத்தியவதி.எம்., ஈஸ்வரி.வி.ச., (மொ.ஆ.). (2001). *பால்குறிக்கி சோமநாதரின் பசவபுராணம்*, மதுரை: ஸ்ரீ திவ்யா பப்ளிகேஷன்.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.